| சாட்சி : DW1<br>சங்கப்பிள்ளை | அ.வ.எண்.371/2022 | 02.09.2025 |
|---|---|---|

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

3) தாவா ஏ அட்டவணை சொத்திற்கு தென்புறத்தில் உள்ள சொத்து ராஜா என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய பத்திரம் உள்ளதா என்றால் பத்திரம் இருந்தது, வீடு எரிந்த போது எரிந்துவிட்டது. மேற்படி எரிந்ததற்கு ஏதேனும் புகார் உள்ளதா என்றால் இல்லை. தாசில்தார் மற்றும் VAO வந்து பார்த்துவிட்டு போனார்கள். வீடு எரிந்து போனதற்கு ஆதாரம் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. ராஜா எப்போது இறந்துபோனார் என்றால் அவர் இறந்து 50 வருடம் இருக்கும். அவர் இறந்ததற்கு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எரிந்துபோன பத்திரத்தின் நகல் வாங்கி தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. 1,2 பிரதிவாதிகள் மேற்படி ராஜாவின் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

4) 1,2 பிரதிவாதிகள் எந்த வருடம் பிரமிளாவிற்கு விற்பனை செய்தார்கள் என்றால் சுமார் 3 வருடத்திற்கு முன்பு விற்பனை செய்துள்ளார்கள். ஆனால் உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் 10 வருடங்களுக்கு முன்பு கிரையம் வாங்கியதாக சொல்லியிருப்பது பொய் என்றால் பொய் தான். பிரமிளா கிரையம் வாங்கியதற்கான கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அதற்கு பத்திரம் உள்ளதா என்றால் பிரமிளாவிடம் நாங்கள் எழுதி கையெழுத்து வாங்கி வைத்துள்ளோம், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அது பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை.

5) பிரமிளாவிற்கு மேற்படி சொத்து பாத்தியப்பட்டது இல்லை என்ற நிலையில் வாதிகள் மேற்படி சொத்தை அபகரிக்க திட்டமிட்டதாக நீங்கள் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்து 1,2 பிரதிவாதிகளுக்கு நீண்ட காலமாக பாத்தியம் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் அவர்களிடம் தான் கேட்க வேண்டும். நீங்கள் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்ய தோணவில்லையா என்றால் இல்லை. அந்த இடத்தை பிரமிளா வாங்கியதற்கான பத்திரம் உள்ளதா என்றால் எரிந்து போய்விட்டது. அதற்கான ஆவணங்களை நகல் வாங்கி தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

6) தாவா பி அட்டவணை சொத்து 1,2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இல்லை என்றாலும் நீங்கள் வழக்கிற்காக அவர்களின் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. எந்த இடத்தை யார் வாங்கினார்கள் என்றால் ராஜாவின் இடத்திற்கு தெற்கில் உள்ள சொத்தை மாரிமுத்து, மலையாண்டி என்பவரிடம் வாங்கினார். அதற்கு அவர் பத்திரம் போட்டுள்ளாரா என்றால் அது எனக்கு தெரியாது. வாதி மாரிமுத்து தாவா பி அட்டவணை சொத்தை தான் வாங்கினார் என்றாலும் அதை நீங்கள் மாற்றி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 11.09.2025 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.